Tuesday, the 4th March 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (The Hon. Thiru M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Sales tax on film rights.

@ *64. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether film producers pay sales tax at the time of selling their film rights to distributors;

(*b*) whether the Government are aware of the fact that such a tax is being levied in the Maharashtra State at the time of sale of film rights; and

(*c*) whether the Bombay High Court too passed a judgment allowing such sales tax?

திரைப்பட சுருள் விற்பனையின் மீது விற்பனை வரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திரைப்படத் தயாரிப்பாளர்கள் தங்கள் படங்களின் உரிமையை வினியோகஸ்தாகளுக்கு விற்கும்பொழுது விற்பனை வரி கட்டுகின்றனரா?

(இ) மகாராஷ்டிர மாநிலத்தில் திரைப்பட விற்பனையின் மீது விற்பனை வரி விதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(உ) பம்பாய் உயர்நீதி மன்றம் விற்பனை வரியை **ஊர்ஜிதம்** செய்து தீர்ப்பு வழங்கியதா?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (*a*) Assessment proceedings initiated in certain cases have been questioned in writ petitions before the Madras High Court and the matter is *sub-judice*.

(*b*) & (*c*) It is ascertained from the Government of Maharashtra that the question whether cinematograph film is saleable commodity or not is at present pending before the Maharashtra Sales Tax Tribunal in certain proceedings.

திரு. என். ஆர். தியாகராஜன் : மகாராஷ்டிரத்தில் மட்டுமல்ல. மற்ற ராஜ்யங்களில்கூட சினிமாப்படங்கள் மீது விற்பனை வரி போடுவதாகத் தெரிகிறது. நம் ராஜ்யத்தில் புதிதாக விற்பனை

@ Question postponed from the list of questions for the 28th February 1969.

வரியில், பலவகையில் அனுமதிக்கச் சட்டங்கள் பாஸ் செய்கிறோம். சினிமாப் படக்காரர்களுக்கு மட்டும் ஏன் விதிவிலக்குக் கொடுக்க வேண்டும் ? அதையும் தீவிரமாகப் பரிசீலித்து வரி போடுவதற்கு முயற்சிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பதிலைத் தவருகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். உண்மையான நிலை அப்படியில்லை. சில சினிமாக் கம்பெனிகள் மீது இந்த வரி அஸ்செஸ்மெண்ட் நோட்டீஸ் கொடுக்கப்பட்ட நேரத்தில், அவர்கள் ஹைகோர்ட்டில் தாவா செய்திருக்கிறார்கள். பத்மினி பிக்சர்ஸ், டி. முகர்ஜி, பாபுராம் பிக்சர்ஸ், ராஜேந்திரன் பிக்சர்ஸ் என்பன போன்ற சினிமாப்பட நிறுவனங்கள், ஹைகோர்ட்டில், வரிபோடக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இதேபோல தேவர் பிலிம்ஸ் கம்பெனி மீதும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, அதுவும் தாவாவில் இருக்கிறது. இவைகள் மீது எல்லாம் இன்றைக்கு வரி போடுவதற்கு உரிமை இருக்கிறதா இல்லையா, என்பதற்கான தாவா ஹைகோர்ட்டில் இருக்கிறது.

திரு. சா. கணேசன் : இதற்கு வரி போடுகிற விஷயமாக யோசிக்கும்போது இது படங்களை விற்பனை செய்கிறதாக அமைகிறதா அல்லது படங்களைக் காட்டி பகுதி பெறுகிற நிலையிலுள்ள உரிமைகளை மட்டும் கொடுக்கிறார்களா ? விலைக்கு விற்கிறார்களா அல்லது வாடகைக்கு விடுகிறார்களா ? அல்லது இரண்டும் இருக்கிறதா ? எந்தெந்த முறையில் அரசு கவனிக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற முறைதான் இப்போது தாவாவில் இருக்கிற விஷயம். ஒரு பட கம்பெனிகாரர் பட வினியோகஸ்தர்களுக்கு படத்தை விற்கிறார். வரி விதிக்கும் உரிமை முழுமையாக சேலபிள் கமாடிடியாகவா அல்லது காண்பிக்கிற உரிமை மீது மட்டும் இருக்கிறதா என்பதுதான் இப்போதுள்ள பிரச்னை. இது சம்பந்தமாக ஏற்கனவே ஒரு வழக்கு ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அவர்களுக்கும் நம்முடைய சர்க்காருக்கும் ஹைகோர்ட்டில் நடந்தது. "The transaction of the kind referred to in the Legislative Council Question put by the hon. Member Thiru Thiagarajan was held not liable to tax under the Madras General Sales Tax Act, 1959." என்று அவர்கள் கேட்டிருக்கிற, விற்கிறதற்கு வரி இருக்கிறதா, என்பதற்கு ஏ.வி.எம்-க்கும் கமர்ஷியல் டாக்ஸ் துறைக்கும் நடந்த வழக்கில் ஹைகோர்ட் தீர்ப்பு வழங்கியது. ஆனால் அந்தத் தீர்ப்பை எதிர்த்து நம்முடைய அரசு சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பம்பாயில் இதுபோன்ற பிரச்னை வந்தது. சில வழக்குகள் டிரிபியூனல் முன்னால் இருந்தாலும் கூட, பம்பாய் வழக்குமன்றம் அங்குள்ள

4th March 1969]

சேல்ஸ் டாக்ஸ் ஆக்ட் படி வரி விதிக்கப்படுகிற உரிமை இருப்ப தாகக் கூறுகிறது. டீலராக இருந்தால் வரி விதிக்கப்படுகிற உரிமை இல்லை. பட தயாரிப்பாளர்கள் விற்பனையாளர்கள் தான், ஆகையால் அதற்கு வரி போடலாம் என்று பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆனால் அந்தப் பட வினியோகஸ்தர்கள் கொடுக்கிற படம் 'சேலபிள் கமாடிடியா (saleable commodity) இல்லையா என்பது பற்றி பம்பாயில், விசாரணை முடியாமல் இருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: சினிமாப் படம் பார்ப்பதற்கு என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் போடப்படுகிறது. அதைக் குறைத்தால் ஏழை எளியவர்கள் பார்ப்பதற்கு வசதியாக இருக் காதா?

Land Revenue.

@* 65. *Q.*—THIRU K. RAMAKRISHNA ACHARI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether land revenue was waived during the last fasli in Kanyakumari district;

(*b*) if so, (1) the number of acres for which land revenue was waived and (2) the amount of loss sustained thereby by the Government; and

(*c*) the basis on which it was worked out?

நிலவரி.

திரு. கே. இராமகிருஷ்ண ஆச்சாரி: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்ற பசலி ஆண்டில் கன்யாகுமரி மாவட்டத்தில் நிலவரி ரத்து செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில் (1) எத்தனை ஏக்கருக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டது? (2) அரசுக்கு எவ்வளவு பணம் இதனால் இழப்பு ஏற்பட்டது?

(உ) எந்த அடிப்படையில் அவை கணக்கிடப்பட்டன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) இல்லை. 1964-ம் ஆண்டு தமிழ் நாடு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதி) நிலவரி ஏற்பாட்டுச் சட்டத்தின்படி கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும், நிலவரி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேற்படி சட்டத்தின் 10-வது பிரிவின்படி, நிலச்சொந்தக்காரர் நிலவரி செலுத்தத் தொடங்கும்போது, புன்செய் நிலங்களுக்காக வசூலிக்கப்படும் அடிப்படைத் தீர்வை ஜூலை 1, 1969 முதற்கொண்டே தள்ளப்படும்.

(இ) & (உ) இவ்வினாக்கள் எழவில்லை.

* Questions postponed from the list of questions for the 18th February 1969.